இல்லாத சலுகைகளையும் கொடுத்துவிடுவதும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை கருத்தில் எடுத்துக் கொண்டு இந்தப் பிரச்சினை முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் **496** முதல் **500** வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Government Polytechnic for Women, Adyar

***501 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:—**

(*a*) the number of girl students who have successfully completed Diploma Course in Civil Engineering at the Government Polytechnic for Women, Adyar, since its introduction.

(*b*) the number of those successful candidates who are under Government employment ; and

(*c*) whether any alternate employment has been provided for the unemployed diploma holders (girls) ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) 28 பேர்.

(இ) 11 பேர்.

(உ) டிப்ளொமா பெற்றவர்கள் அனைவருக்கும் அரசாங்கத்தால் வேலை அளிக்க இயலாது.

DR. H. V. HANDE : In these days when even boys are not able to get any jobs after having taken the diploma, many of these girls who have got in into the course, are very much disappointed. If these passed girls are not going to be absorbed, it will be a disincentive for further girls to come and join. In view of this, will the Ministry take some more sympathetic attitude than what they are doing now and see that these passed girls are given employment at least in Government departments and if all of them are not likely to be taken in, will the Ministry consider giving them alternative jobs wherein their technical skill is not properly utilised ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்தில் எந்த அளவுக்கு வேலை , இருக்கின்றதோ அந்த அளவுக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் தனியார் துறையிலும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் தனிப்பட்ட முறையில் வேறு எதாவது உதவி வேண்டுமானால் எழுதிக் கேட்டால் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

கடலூர் கலைக் கல்லூரி முதல்வர்

***502** வினா—**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரிலுள்ள கலைக் கல்லூரியின் பிரின்சிபால் 1967-ம் ஆண்டு மாணவர்களைச் சேர்ப்பதில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார் என்று திரு சி. கோவிந்தராஜன், எம்.எல்.ஏ. அவர்களால் 12—8—1967-ல் அனுப்பப்பட்ட மனு ஏதேனும் மாண்புமிகு கல்வி அமைச்சர் மூலம் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ?

(இ) குறைந்த மார்க்குகள் வாங்கிய மாணவர்களை கல்லூரியில் சேர்த்தது உண்மையா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) புகு முக வகுப்பில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வில் வாங்கிய மதிப்பெண்கள் மட்டுமின்றி, பாடத் திட்டத்திற்குப் புறம்பான (விளையாட்டுப் பந்தயங்கள், சமூகத் தொண்டுகள் போன்ற) செயல்களில் பெற்ற தேர்ச்சி முதலானவையும் கணக்கில் கொள்ளப்படுகின்றன.

திரு. சி. கோவிந்தராசன் : கடலூர் கலைக் கல்லூரி முதல்வர் சம்பந்தமாக பல்வேறு விஷயங்களைக் குறிப்பிட்டு அன்றிருந்த தொழில் கல்வி அமைச்சர் அவர்களுக்கும், நகல் ஒன்று முதல் அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக விசாரணை நடத்தப் பட்டதா, முடிவு என்ன எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றி அறிக்கை கேட்கப் பட்டது. அந்தக் கல்லூரி முதல்வர் அவர்கள் அரசாங்கம் பிறப்பித்த ஆணையின்படி மதிப்பெண்ணை மட்டும் எடுத்துக் கொள்ளாமல், வேறு எக்ஸ்ட்ரா கரிக்குலர் ஆக்டிவிடீஸையும் எடுத்துக்கொண்டு தேர்வை நடத்தியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சில சாட்சியங்களைத் தருவதாகச் சொல்லியிருப்பதாக தகவல் இருக்கிறது. அந்த சாட்சியங்கள் கிடைத்தவுடன் பரிசீலித்து எழுதுவதாக நம்முடைய இயக்குனர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள் அரசுக்கு.

திரு. சி. கோவிந்தராஜன் : இந்தக் கல்லூரி முதல்வர் 1966-ம் ஆண்டு சென்னையில் உள்ள கலைக் கல்லூரி முதல்வராக இருந்தார். அப்பொழுது புகுமுக வகுப்பில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது, எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சையில் தேருத, பரீட்சையில் தவறிய, ஒரு மாணவனை புகுமுக வகுப்பில் சேர்த்துவிட்டதாக வதந்தி உலாவுகிறது. அரசாங்கம் அதுபற்றி உண்மையை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : வதந்திகளை எப்பொழுதும் அரசாங்கம் நம்புவதில்லை. 1966-ம் ஆண்டு நிகழ்ச்சியைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது சொல்லி, வதந்தி என்று சொல்லிவிடக் கூடாது. அதைப்பற்றி கேள்வி கேட்பதற்குப் பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும். அது தான் நம்முடைய விதிமுறையில் இருப்பது. திரு கோவிந்தராஜன் அவர்கள் கேள்வி கேட்கக்கூடிய நேரத்தில், அதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடிய நிலையிலிருந்து அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகள்

*503 —வினா : **திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளிகள் திறப்பதற்காக கட்ட வேண்டிய பணத்தை கட்டிய பின் இன்னும் (ஜூன் 1968 வரை எத்தனை பள்ளிகள் திறக்கப்படாமல் உள்ளன ?

(இ) திறக்கப்படாமல் உள்ள பள்ளிகளுக்காகக் கட்டப்படும் பணம் திருப்பி தரப்படுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) நான்கு.

(இ) ஆம்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : உயர்நிலைப் பள்ளியைத் துவக்குவதற்காக அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அதற்கு அனுமதி கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.